# இலக்கியம் – திருக்குறள்

இறைவன் மனிதனுக்குச் சொன்னது– **கீதை**
மனிதன்
இறைவனுக்கு சொன்னது– **திருவாசகம்**
மனிதன் மனிதனுக்கு சொன்னது – **திருக்குறள்**

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **ஆசிரியர்** | திருவள்ளுவர் |
| **பெற்றோர்** | ஆதி, பகவன் |
| **ஊர்** | சென்னையில் உள்ள மயிலாப்பூர் என்ற ஒரு சாரரும் மதுரை என்ற ஒரு சாரரும் கூறுவர். |
| **காலம்** | சரியாக கூற இயலவில்லை என்றாலும், மறைமலை அடிகள் செய்த ஆராய்ச்சியின் பயனாக கி.மு. 31 என கணக்கிடப்பட்டு திருவள்ளுவர் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. |

**பெயர் காரணம்**

குறள் என்றால் இரண்டு அடிகளால் ஆன செய்யுள் என்பது பொருளாகும். மேன்மை பொருந்திய குறள் என்பதால் திரு என்று அடைமொழி சேர்க்கப்பட்டு திருக்குறள் என்று பெயர் பெற்றது. திரு அடைமொழி திருக்குறள் என்பது பாட்டை உணர்த்தாமல் நூலை உணர்த்துவதால் அடையடுத்த கருவியாக பெயராகும்.

## நூல் அமைப்பு

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற முப்பெரும் பிரிவுகளை உடையது. 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் கொண்டுள்ளது.

**நூல்குறிப்பு:** திரு+ குறள் - திருக்குறள்

- மேன்மையான குறல் வெண்பாக்களினால் ஆகிய நூலாதலின் திருக்குறள் என பெயர் பெற்றது. இஃது ஈரடிகளில் இயற்றப்பட்டிருப்பினும் விரிவான பொருளை தருகின்றது.
- நாடு மொழி இனம் மதம் காலம் ஆகியவற்றை கடந்து நிற்கின்றது.
- இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும்.

**அட்டவணை – 1**

| **நிலைகள்** | கூறுகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பால்** | **அறம்** | | | | **பொருள்** | | | **இன்பம்** | |
| **இயல்** | **பாயிரம்** | **இல்லறம்** | **துறவறம்** | **ஊழியல்** | **அரசு** | **அங்கம்** | **ஒழிபு** | **களவு** | **கற்பு** |
| **அதிகாரம்** | 4 | 20 | 13 | 1 | 25 | 32 | 13 | 7 | 18 |
| **குறள்** | 40 | 200 | 130 | 10 | 250 | 320 | 130 | 70 | 180 |

## திருவள்ளுவரின் வேறு பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| செந்நாப்போதார் | நாயனார், | நான்முகனார் | பெருநாவலர் |
| தெய்வப்புலவர் | முதற்பாவலர் | மாதானுபங்கி | கோயில் புலவர். |

## திருக்குறளின் வேறு பெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| முப்பால் | உலகப்பொதுமறை | தமிழ் மறை | வான்மறை |
| உத்தரவேதம் | பொய்யாமொழி | திருவள்ளுவம் | |
| தெய்வ நூல் | வாயுறை வாழ்த்து | ஈரடி நூல் | |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**திருக்குறளின் சிறப்புகள்**

⇒ திருக்குறளுக்கு முதலில் வைத்த பெயர் முப்பால். உலகம் ஏற்கும் கருத்துக்களை கொண்டு உள்ளதால் 'உலகப் பொதுமறை' என வழங்கப்படுகிறது.

⇒ முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு கி.பி 1812 முதன்முதலில் அச்சிட்டவர் தஞ்சாவூர் மலையத்துவசன் மகன் ஞானபிரகாசம்.

⇒ திருக்குறளில் இரண்டு அதிகாரங்கள் ஒரே பெயரில் அமைந்துள்ளன.

⇒ குறிப்பறிதல் – அதிகாரம் 71 (பொருட்பால்)

⇒ குறிப்பறிதல் அதிகாரம் 110 (காமத்துப்பால்)

⇒ திருக்குறளை முதன்முதலில் மொழி பெயர்த்தவர் வீரமாமுனிவர் (இலத்தின்); ஆண்டு – 1730.

⇒ திருக்குறள் 107 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

⇒ திருக்குறள் நரிக்குறவர்கள் பேசும் **'வக்போலி'** மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

- **திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்திய மொழிகள் 14 அவையாவன;**

| | |
|---|---|
| குஜராத்தி | மணிப்புரியம் |
| ஹிந்தி | ஒரியா |
| வங்காள மொழி | பஞ்சாபி |
| கன்னடம் | இராஜஸ்தானி |
| கொங்கணி | சமஸ்கிருதம் |
| மலையாளம் | சௌராஷ்டிரம் |
| மராத்தி | தெலுங்கு. |

- திருக்குறளில் 12,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்நூலில் இடம்பெறாத சொற்கள் **தமிழ் கடவுள்.**
- இந்நூலில் இடம்பெற்றுள்ள மலர்கள் – அனிச்சம், குவளை.
- இந்நூலில் இடம்பெற்றுள்ள பழம் – நெருஞ்சிப் பழம்
- இந்நூலில் இடம்பெற்றுள்ள விதை – குன்றிமணி.
- இந்நூலில் இடம்பெற்றுள்ள மரங்கள் – பனை, மூங்கில்.
- இந்நூலில் இடம்பெறாத ஒரே உயிர் எழுத்து – ஔ
- இந்நூலில் அதிகம் பயன்படுத்தப்பட்ட எழுத்து – னி
- ஒரே ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்ட எழுத்து – ளீ
- தமிழில் உள்ள 247 எழுத்துக்களில் 37 எழுத்துக்கள் மட்டுமே பயன்படுத்தப்படவில்லை.
- இந்நூலில் 9 என்ற எண் இடம்பெறவில்லை.
- 7 என்ற எண் எட்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
- கோடி என்ற எண் 7 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
- 70 கோடி என்ற எண் ஒருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இந்நூலின் பெருமையை விளக்குவதற்காக '**திருவள்ளுவமாலை**' என்ற ஒரு தனி நூலே இயற்றப்பட்டுள்ளது.
- உலக மொழிகளில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் உலக அளவில் மூன்றாவது இடத்தையும், தமிழ் நூல்களுள் முதல் இடத்தையும், இந்நூல் இடம் பெற்றுள்ளது.

www.tnpscgroup4.in

- இந்நூல் தமிழ் மொழியின் முதல் எழுத்தான **'அ'**– வில் ஆரம்பித்து தமிழின் கடைசி எழுத்து 'ன்' – இல் முடிந்துள்ளது.

**அ**கர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு **- குறள் – 1**

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறி**ன்** **- குறல் – 1330**

**இந்நூலில் ஒரே ஒரு அதிகாரத்தை கொண்ட இயல்கள்:**

- ஊழியல் 371 முதல் 380
- கூழியல் 751 முதல் 760 வரை
- ஆளும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.

**இடைக்காடர் கூற்று**

- கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி குறுக தரித்த குறள்– **திருவள்ளுவமாலை** (54)

**அவ்வையார் கூற்று**

- அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள் – **திருவள்ளுவமாலை** (55).

➢ வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட - **தமிழ்நாடு பாரதியார்**

➢ பொதுமறை தந்த தேவன் பொய் சொல்லா புலவன் - **கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை**

➢ 'தமிழ்மொழி அழகான சித்திர வேலைபாடமைந்த வெள்ளித் தட்டு' திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள். தமிழ் என்னை ஈர்த்தது ; குரலோ என்னை இழுத்தது. **டாக்டர் கிரௌல்.**

➢ தமிழுக்கு கதி எனப்படுபவை கம்பராமாயணமும், திருக்குறளும் ஆகும்.

**<u>செல்வ கேசவராய முதலியார்</u>**

➢ இங்கிலாந்து நாட்டு மகாராணியர் விக்டோரியா காலையில் கண் விழித்து முதலில் படித்த நூல் – திருக்குறள்.

➢ உருசிய நாட்டில் அணு துளைக்காத கிரெம்லின் மாளிகையில் உள்ள சுரங்கப் பாதுகாப்பு பெட்டகத்தில் திருக்குறளும் இடம் பெற்றுள்ளது.

➢ இங்கிலாந்து நாட்டில் உள்ள அருங்காட்சியகத்தில் திருக்குறள் விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைக்
பற்றுக பற்று விடற்கு. – திருக்குறள், 350**

➢ மேற்கொண்ட இக்குறளைப் படிக்கும் போது உதடுகள் ஒட்டும் இதன் பொருளோ இறைவனைப் பற்றி நிற்கும்.

**அறம் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் –திருக்குறள், 754**

➢ மேற்கண்ட குறளில் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் அமைந்துள்ளன.

➢ திருக்குறளில் பத்து அதிகாரங்கள் உடமை என்னும் பெயரில் அமைந்துள்ளன

| | |
|---|---|
| அன்புடைமை | அறிவுடையமை |
| அடக்க உடைமை | ஊக்கமுடைமை |
| ஒழுக்க உடைமை | ஆள்வினையுடைமை |
| பொறையுடையமை | பண்புடைமை |
| அருளுடைமை | நாணுடைமை |

**பாராட்டுரைகள் :**

**வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய்
விளைத்த வற்றுள்
பொல்லா தில்லை புரை தீர்ந்த வாழ்வியினிலே**

அழைத்து சொல்லாத தில்லை இணையில்லை
முப்பாலுக்கிந் நிலத்தே - பாரதிதாசன்

வள்ளுவனை பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே - பாரதிதாசன்

திருக்குறள் ஒரு வகுப்பாற்கோ
ஒரு மதத்தார்க்கோ
ஒரு நிறத்தார்க்கோ
ஒரு மொழியார்க்கோ
ஒரு நாட்டார்கோ உரியதென்று
அது மண்பதைக்கு
உலகுக்குப் பொது - திரு.வி.க

திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால், தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்கு தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றியிறாவிட்டால், தமிழ் மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்திற்கு தெரிந்திருக்காது.
- கி அ.பெ.விஸ்வநாதம்

புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்

சித்தம் கலங்கித் திகைப்பதேன் – வித்தகன்

தெய்வப்புலவர் திருவள்ளுவர் சொன்ன பொய்யின்
மொழி இருக்கும்போது - கவிமணி

செந்தமிழ் செல்வன் திருக்குறளை நெஞ்சமே
சிந்தனை செய்வாய் தினம் - கவிமணி

நீதி திருக்குறளை நெஞ்சார தம் வாழ்வில் ஓதித்
தொழுது எழுக ஓர்ந்து - கவிமணி

## திருக்குறள் உரையாசிரியர்கள்

### முற்காலம்:

| | |
|---|---|
| தருமர் | திருமலையார் |
| மணக்குடவர் | மல்லர் |
| தாமதத்தர் | கவிப்பெருமாள் |
| பரிதி | காளிங்கர் |
| பரிமேலழகர் | நச்சர் |

- முதன் முதலில் திருக்குறளுக்கு உரை எழுதியவர் மணக்குடவர் ஆவார்.
- **பிற்காலம்**

| | |
|---|---|
| வ. உ. சிதம்பரனார் | புலவர் மயிலை |
| டாக்டர். மு. வரதராசனார் | சிவமுத்து |
| திரு. வி. கல்யாண சுந்தரனார் | தே. போ. மீனாட்சி சுந்தரனார் |
| சி. இலக்குவானர் | நாமக்கல். கவிஞர் |
| நா. சுப்புரெட்டியார் | கி.வா. ஜெகநாதன் |
| திருக்குறளார் | பாரதிதாசனார் |
| வீ. முனுசாமி | புலவர் குழந்தை |
| வ. உ. சிதம்பரனார் | கா. சுப்பிரமணிய பிள்ளை |






TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in